**சுருக்கம்**

தமிழ் வளர்ச்சி – தமிழில் வெளியிடப்படும் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் - 2018-ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் போட்டிக்கு வரப்பெற்று தெரிவுக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட தமிழில் சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்கள் மற்றும் அதன் பதிப்பகத்தார்களுக்கு பரிசு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2-2)த் துறை

அரசாணை (ப) எண். 22

நாள் 08.02.2021
சார்வரி, தை - 26
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (ப) எண். 86, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (த.வ.2.2)த் துறை, நாள் 03.04.2012.
2. அரசாணை (ப) எண்.176, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.2.2)த் துறை, நாள் 31.12.2020.

படிக்க:

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.4233/ஆ.மொ.2/2019, நாள் 18.01.2021.

*******

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் போட்டிக்கு வரப்பெறும் நூல்களில் சிறந்தவற்றைத் தெரிவு செய்ய புதிய நிலைக் குழு அமைத்து அரசால் ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017-ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நூல்களில் போட்டிக்கு வரப்பெற்று தெரிவுக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட தமிழில் சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்கள் மற்றும் அதன் பதிப்பகத்தார்களுக்கும் பரிசு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 2018-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு போட்டிக்கு வரப்பெற்ற நூல்களை, வகைப்பாடு வாயிலாகப் பரிசுக்குரிய நூல்களை / பதிப்பகங்களை தெரிவு செய்து நிலைக் குழு பரிந்துரைத்த பட்டியலை அரசின் ஏற்பிற்காக தமிழ் வளர்ச்சி இயக்குநர் அனுப்பியுள்ளார்.

4. மேலும், 2018-ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட 33 வகைப்பாடுகளில் வரப்பெற்ற நூல்களில், வகைப்பாடு

(த.பி.பா)

எண்.9, 11, 14, 18, 27, மற்றும் 32-இல் இரண்டு நூல்களும், வகைப்பாடு எண்.13, 21, 24, 25, 30, 31-இல் மூன்று நூல்களும் தெரிவு செய்யப்பெற்றுள்ளதாலும், வகைப்பாடு எண்.5, 16, 26, 28 மற்றும் 29-ல் உள்ள நூல்கள் விதிகளின்படி கருத இயலாததாலும், மேற்காணும் ஐந்து வகைப்பாடுகள் நீங்கலாக 28 வகைப்பாடுகளுக்கான நூல்களின் நூலாசிரியர்களுக்கும் மற்றும் அதனைப் பதிப்பித்த 28 பதிப்பகங்களுக்கும் பரிசு வழங்கலாம் என்று தெரிவுக்குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு, தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சான்றளிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்ட பட்டியலை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2018-ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நூல்களில் 28 வகைப்பாடுகளுக்கான சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்கும் மற்றும் பதிப்பகங்களுக்கும் பரிசுகளை வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு),சென்னை-8
மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1),
சென்னை-18
நகல்:
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும்தமிழ்ப் பண்பாடு)
அவர்களின் சிறப்பு உதவியாளர், சென்னை-9.
செயலாளரின் முதன்மை தனிச் செயலர், தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை,சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

10/2/21
பிரிவு அலுவலர்.

10/2/2021

அரசாணை (ப) எண்.22, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ2.2)த் துறை, நாள் 08.02.2021-இன் இணைப்பு

| வ. எண் | வகைப்பாடு | நூல் | ரூ.30,000/- பரிசு பெறும் நூலாசிரியர் | ரூ.10,000/- பரிசு பெறும் பதிப்பகம் |
|---|---|---|---|---|
| 1. | மரபுக்கவிதை | தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ் | முனைவர் வீ. சேதுராமலிங்கம், சென்னை – 600 083. | பேதுரு பதிப்பகம், சென்னை – 600 078. |
| 2. | புதுக் கவிதை | இராசி அழகப்பன் கவிதைகள் | திரு.ராசி அழகப்பன், சென்னை – 600 119. | பரிதி பதிப்பகம், ஜோலார்பேட்டை – 635 851. |
| 3. | புதினம் | கங்காபுரம் | அ.வெண்ணிலா, வந்தவாசி – 604 408. | அகநி வெளியீடு, வந்தவாசி – 604 408. |
| 4. | சிறுகதை | பிராண நிறக் கனவு | அண்டனூர் சுரா, புதுக்கோட்டை மாவட்டம். | பன்முக மேடை வெளியீடு, தேனி. |
| 5. | நாடகம் (உரைநடை, கவிதை) | வரப்பெற்ற 5 நூல்களும் பக்கக் குறைவு என்பதால் போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை | | |
| 6. | சிறுவர் இலக்கியம் | இராமாயணக் கதைகள் | ஆர். கல்யாணி மல்லி, சென்னை – 600 061. | கண்ணதாசன் பதிப்பகம், சென்னை – 600 017. |
| 7. | திறனாய்வு | வாய் மொழி மரபும் எழுத்து மரபும் | முனைவர் ஆறு. இராமநாதன், துரைப்பாக்கம். | மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108. |
| 8. | மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி இலக்கணம் | தமிழால் மருத்துவக் கல்வி முடியும் | டாக்டர் சு. நரேந்திரன், தஞ்சாவூர்-1. | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிட் (பி), சென்னை – 600 098. |
| 9. | பிறமொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் | ஸ்ரீ தாம்ரபர்ணி மகாத்மியம் | திரு. வே. மகாதேவன், சென்னை – 44. | தாமிரபரணி புஷ்கரப் பெருவிழா, குழுவினர், திருநெல்வேலி – 627 357. |
| | | பையன் | ரோகிணி ஜெகந்நாதன், சென்னை – 600 086. | ஸ்ரீ ஆர்.ஜெ.ஒய் பப்ளிகேஷன்ஸ், சென்னை – 600 086. |
| 10. | நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) | கல்வெட்டெழுத்து ஆவணங்களும் - சுவடிகளும் | முனைவர் கோ. உத்திராடம், சென்னை – 600 048. | நாம் தமிழர் பதிப்பகம், சென்னை – 600 005. |
| 11. | அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் | தமிழில் புதிய சொற்கள் | முனைவர் ந. ஆனந்தி, சென்னை – 600 063. | மங்கை வெளியீடு, சென்னை – 600 018. |
| | | இசைத் தமிழ்க் கலைச் சொல் அகராதி | முனைவர் அரிமளம் சு. பத்மநாபன், புதுச்சேரி. | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிட் (பி), சென்னை – 600 098. |
| 12. | பயண இலக்கியம் | யானைகளின் கடைசி தேசம் | முனைவர் மு.இராஜேந்திரன் இ.ஆ.ப., சென்னை - 600 092. | அகநி வெளியீடு, வந்தவாசி – 604 408. |

| வ. எண் | வகைப்பாடு | நூல் | ரூ.30,000/- பரிசு பெறும் நூலாசிரியர் | ரூ.10,000/- பரிசு பெறும் பதிப்பகம் |
|---|---|---|---|---|
| 13. | வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு | 1. மனதில் நிற்கும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் | வளவனூர் முருகன், விழுப்புரம் மாவட்டம். | மின்னல் கலைக்கூடம், சென்னை – 600 018. |
| | | 2. செயலே சிறந்த சொல் | முனைவர் மு. இராஜேந்திரன் இ.ஆ.ப., சென்னை 600 092. | அகநி வெளியீடு, வந்தவாசி – 604 408. |
| | | 3. தமிழ் அறிஞர்கள் | ஜனனி ரமேஷ், சென்னை – 600 037. | கிழக்கு பதிப்பகம், சென்னை – 600 014. |
| 14. | நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு | 1. தமிழக வரலாற்றில் பெரம்பலூர் | திரு. ஜெயபால் இரத்தினம், பெரம்பலூர் – 621 212. | விச்சி பதிப்பகம், பெரம்பலூர் – 621 212. |
| | | 2. இந்திய ரயில் போக்குவரத்தின் சுவையான வரலாறு | 1. பேராசிரியர் பொ. முத்துக்குமரன், திருவேடகம் மேற்கு, மதுரை.<br>2. பேராசிரியர் டாக்டர் ம. சாலமன் பெர்னாட்ஷா, கருமாத்தூர். | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600 098. |
| 15. | கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் | சங்க கால வானிலை | முனைவர் கு.வை. பாலசுப்பிரமணியன் சென்னை – 600 011. | முக்கடல், சென்னை – 600 091. |
| 16. | பொறியியல், தொழில் நுட்பவியல் | ஒரு நூல் மட்டுமே வரப்பெற்றுள்ளது. விதி எண்.15-இன்படி போட்டிக்கு கருதஇயலாது. | | |
| 17. | மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் | குறிக்கோளைத் தேடி | திரு. ச. வைரவராஜன் திருநெல்வேலி – 627 002. | சங்கமித்ரா பதிப்பகம், திருநெல்வேலி – 627 002. |
| 18. | சட்டவியல், அரசியல் | 1. திராவிடர் இயக்கத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் | திரு. அ. சுப்ரமணியன் மதுரை – 625 016. | துளசி பதிப்பகம், மதுரை – 625 016. |
| | | 2. ஊனங்கள் கொண்ட நபர்களின் உரிமைகள் சட்டம் | திரு. பி. ஆர். ஜெயராஜன், சேலம் – 636 007. | சுப்ரீம் லா பப்ளிகேஷன்ஸ், சேலம் – 636 007. |
| 19.. | பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் | கட்டுமானத்துறை மேலாண்மை வழிகாட்டி | திரு. பா. சுப்ரமண்யம், சென்னை – 600 012. | பிராம்ப்ட் பதிப்பகம், சென்னை – 600 006. |
| 20. | மருந்தியல், உடலியல், நலவியல் | மூளைக்குள் சுற்றுலா | முனைவர் வெ. இறையன்பு, சென்னை – 600 028. | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிட் (பி), சென்னை – 600 098. |
| 21. | தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) | 1. கைநாடி வாகடம் | மரு.தெ.கிரு. மோகன்தாஸ், சேலம் – 636 006. | கஞ்சமலை காலாங்கி சித்தர், பதிப்பகம், சேலம் – 636 006. |
| | | 2. சர்க்கரை நோயாளிகளுக்கு ஒரு சித்தமருத்துவரின் கடிதம் | மரு. பா. ஜெரோம் சேவியர், சென்னை – 600 100. | காவ்யா பதிப்பகம், சென்னை – 600 024. |
| | | 3. ஆண்மலடும் நீக்கும் மருத்துவ முறைகளும் | மரு. க. தங்கதுரை, சென்னை – 600 088. | வானதி பதிப்பகம், சென்னை – 600 017. |

| வ. எண் | வகைப்பாடு | நூல் | ரூ.30,000/- பரிசு பெறும் நூலாசிரியர் | ரூ.10,000/- பரிசு பெறும் பதிப்பகம் |
|---|---|---|---|---|
| 22. | சமயம், ஆன்மிகம், அளவையியல் | சைவ சித்தாந்த விளக்கம் | முனைவர் ஆ. ஆனந்த ராசன், மதுரை – 625 020. | நர்மதா பதிப்பகம், சென்னை – 600 017. |
| 23. | கல்வியியல், உளவியல் | விழுமம் அமைதிக்கான கல்வி | முனைவர் பெ. மயிலவேலன் , சென்னை – 600 061. | வனிதா பதிப்பகம், சென்னை – 600 017. |
| 24. | வேளாண்மையியல், கால்நடையியல் | 1. விவசாயம் | மருத்துவர் வி.ஜி.பி. சந்தோசம், சென்னை – 600 015. | கைத்தடி பதிப்பகம், சென்னை -600 041. |
| | | 2. வேளாண்மையியல் ஓர் அறிமுகம் | முனைவர் கு. கதிரேசன், திருச்சி – 621 216. | லேக்ஸ் மாஸ்டர் பிரிண்ட்ஸ், திருச்சி – 621 008. |
| | | 3. பணம் மற்றும் பலன் தரும் மரங்கள் | முனைவர் கா. த. பார்த்திபன், மேட்டுபாளையம் – 641 301 | கண்ணதாசன் பதிப்பகம், சென்னை – 600 018. |
| 25. | சுற்றுப்புறவியல் | 1. சுற்றுச்சூழல் சிதறல்கள் | திரு. ஜே. ஜோபிரகாஷ், கன்னியாகுமரி மாவட்டம்–629 157. | ரேவதி பதிப்பகம், சென்னை – 600 004. |
| | | 2. நீர் ஆதாரம் | முனைவர் உ. சோலையப்பன், அருப்புக்கோட்டை – 626 101. | ஸ்ரீ பகவதி வெளியீட்டகம், அருப்புக்கோட்டை – 626 101. |
| | | 3. பசுமை விடுகளை படைப்போமா | திரு. ஏ. உதயகுமார், சென்னை- 600 034. | பிராம்ப்ட் பதிப்பகம், சென்னை- 600 006. |
| 26. | கணினியியல் | ஒரு நூல் மட்டுமே வரப்பெற்றுள்ளது. விதி எண்.15-இன்படி போட்டிக்கு கருதஇயலாது. | | |
| 27. | நாட்டுப்புறவியல் | 1. காரியாபட்டி வட்டார மண்ணின் பெருமை | திரு. இர. பரதன், விருதுநகர் மாவட்டம். | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , . சென்னை113. |
| | | 2. தமிழியக்கனின் செந்தமிழ்க் காவடிச் சிந்து | தமிழ்மாமணி தமிழியக்கன், புதுச்சேரி – 605 013. | தமிழ் மொழி பதிப்பகம், புதுச்சேரி – 605 009. |
| 28. | வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் | ஒரு நூல் மட்டுமே வரப்பெற்றுள்ளது. விதி எண்.15-இன்படி போட்டிக்கு கருதஇயலாது. | | |
| 29. | இதழியல், தகவல் தொடர்பு | ஒரு நூல் மட்டுமே வரப்பெற்றுள்ளது. விதி எண்.15-இன்படி போட்டிக்கு கருதஇயலாது. | | |

| வ.எண் | வகைப்பாடு | நூல் | ரூ.30,000/- பரிசு பெறும் நூலாசிரியர் | ரூ.10,000/- பரிசு பெறும் பதிப்பகம் |
|---|---|---|---|---|
| 30. | பிறசிறப்பு வெளியீடுகள் | 1. வரலாற்றில் சில திருத்தங்கள் | திரு. இரா. மன்னர் மன்னன், சென்னை. | எழிலினி பதிப்பகம், சென்னை – 6000 008 |
| | | 2. காவிரியில் அம்மாவுக்கு மகுடம் சூட்டிய இபிஎஸ் – ஓபிஎஸ் | திரு. மீன் பாண்டியன், சென்னை – 600 054. | புதிய பூமி பதிப்பகம், சென்னை – 600 054. |
| | | 3. மகா புத்தாய்வு | கோரா பாபு, சென்னை – 600 044. | நியூ கேலக்சி பப்ளிக்கேசன், புதுச்சேரி – 605 013. |
| 31. | விளையாட்டு | 1. ஏறும் போரும் தமிழரின் வீரம் | திரு கோ.மு. சீனிவாசன், நாமக்கல் மாவட்டம். | மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108. |
| | | 2. கால் பந்தாட்டம் ஒரு நகைச்சுவைக் கண்ணோட்டம் | திரு. ப. குணசேகர், கோயம்புத்தூர்– 641 006 | பண்புப்பதிப்பகம், கோயம்புத்தூர் – 641 006. |
| | | 3. எப்படி வென்றார்கள் | சந்திரா உதயகுமார், சென்னை – 600 034. | நாளந்தா பதிப்பகம், சென்னை – 600 034. |
| 32. | மகளிர் இலக்கியம் | 1. பெரியார் இதழ்களில் பெண் விடுதலைப் போர் | முனைவர் சு. இராஜலட்சுமி, சென்னை – 600 062. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , சென்னை – 600113. |
| | | 2. வரலாறு படைத்த வைர மங்கையர் –தொகுதி – 4 | பேராசிரியர் பானுமதி தருமராசன், சென்னை – 600 026. | புதுகைத் தென்றல் வெளியீடு, சென்னை – 600 026. |
| 33. | தமிழர் வாழ்வியல் | திருக்குறள் வாழ்வியல் விளக்கவுரை (தொகுதி - 1 முதல் 6 வரை) | திரு. இரா. இளங்குமரனார், மதுரை – 625 006. | பாவேந்தர் பதிப்பகம், திருமழபாடி. –621 851. |

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

க. சுந்தர 10/2/21
பிரிவு அலுவலர்.

10/2/2021